18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய ஏற்புடையவாறு அரச கரும மொழி தேர்ச்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

4.0 2025.03.25 திகதியிட்ட இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் MT 01-2025 சம்பளப் பிரிவு இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கு ஏற்புடைய சம்பள அளவு 50,090 - 10 x 540 - 11 x 630 - 10 x 1010 - 10 x 1,190 – 84,420/- ரூபாவாகும். அச்சம்பளம் தங்களுக்க உரித்தாவது 2027.01.01ஆம் திகதியிலிருந்தாகும். நியமனம் நடைமுறையாகும் திகதியிலிருந்து தங்களுக்கு இச்சுற்றறிக்கையில் IIIஆம் அட்டவணையில் ஏற்பாடுகளின் படி சம்பளம் வழங்கப்படும்.

5.0 இந் நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது.

6.0 **தகைமைகள்** :

6.1 **கல்வித் தகைமைகள்** :

(i) கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட ஐந்து (5) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு 2 -

- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சைக்கு சமமான , வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் தோன்றிட்டு பெற்றுக்கொண்ட தகைமைகள் உரித்தாக்கிக்கெள்வது தொடர்பிலான இறுதித் தீரப்பு, ஏற்புடைய கல்வி நிறுவனங்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடமிருந்து உறுதி செய்துக்கொண்டப் பின்னர் நியமன அதிகாரியினால் எடுக்கப்படும்.

6.2 **தோழிற் தகைமைகள்** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பட்டங்கள் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் கணனி அறிவியல் /தகவல் தொழில்நுட்பம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்குரிய டிப்ளோமா, உயர் டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறியொன்று அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு குறையாத பாடநெறியொன்றினைப் பயின்று பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணனி/ தகவல் தொழில்நுட்பம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்குரிய டிப்ளோமா, உயர் டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறியொன்றினைப் பயின்று பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(iii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் அவ் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து அல்லது பாராளுமகன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள சட்டரீதியான நிறுவனமொன்றிலிருந்து ,

(அ) கணனி/ தகவல் தொழில்நுட்பம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்குரிய தேசிய தொழிற் தகைமை (NVQ) ஐந்து (05) அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) பாட விதானம் :

- **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
  பரீட்சைப் பரீட்சார்த்தியின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பிலான பொது அறிவு , இயங்குதளங்கள் , மென்பொருள்கள், ( சொற் செயலி, விரிவுத்தாள் . அளிக்கை .தரவுத்தள முகாமைத்துவம் உட்பட) வன்பொருள், இணையம் மற்றும் மின்னஞ்சல் போன்றத் துறைகளில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவை சோதிக்கும் கட்டமைக்கப்பட்ட மற்றும் பல்தேர்வு வினாக்களைக்கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- **உளச்சார்பு**
  பரீட்சைப் பரீட்சார்த்தியின் புள்ளிவிவரரீதியான ஆற்றல் மற்றும் தர்க்கரீதியாக கருத்து தெரிவித்தல் தொடர்பிலான அறிவினைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்கள் இவ்வினாத்தாளில் அடங்கும். பல்தேர்வு மற்றும் குருகிய விடை வழங்கும் வடிவத்திலான 50 வினாக்களை கொண்டமைந்துள்ளதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு** 3 – பணிக்கடமைக்கான பரீட்சார்த்தியின் தகுதி மற்றும் திறமையை பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது ஒரு பொட்டிப் பரீட்சை என்றாலும், ஒவ்வொரு பாடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தது 40% வீதத்தையாவது பரீட்சார்த்தியால் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் பரீட்சையில் பெற்றுக்கொள்ள வேண்டிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 50% வீதத்தையாவது பெற்றுக்கொள்ளல் வேண்டும். எழுத்து மூலத்திலான அனைத்து வினாப்பத்திரம் தொடர்பிலும், தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்துக்கூட்டங்கள் பற்றிய பிழைகள் தொடர்பில் புள்ளிகள் குறைக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை பூர்த்தி செய்யக் கூடியவாறு பெற்றுக்கொண்ட புள்ளி ஒழுங்கு கட்டாயமாகக் கடைபிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

8.0 **பரீட்சைப் பெறுபேறுகள்** :

தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான <u>www.psc.sp.gov.lk</u> மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனிப்பட்டரீதியில் பார்த்துக்கொள்ள கூடியவாறு பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மாவட்டத் திறன்களின் ஒழுங்குமுறைக்கமைய தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலொன்று நியமன அதிகாரியிடம் வெளியிடப்படும்.

9.0 **பரீட்சைக் கட்டணங்கள்** : பரீட்சைக் கட்டணம் 1000.00 ரூபாவாகும். நிகழ்நிலை மூலம் (online) பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும். அனைத்து கட்டணங்களையும் VIZA அல்லது MASTER அட்டைகள் மூலம் மட்டும் செலுத்த வேண்டியதுடன் அதை தவிர்ந்து ஏனைய முறைகள் மூலம் செய்யப்படும் கட்டணங்களை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சை கட்டணத்திற்கான மொத்த பணத்தையும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேல் குறிப்பிட்ட கட்டண முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் குறைப்பாடுகள் தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பு கூற மாட்டாது.

எக் காரணத்திற்கொண்டும் பரீட்சைக் கட்டணத்தை மீளளிக்கப்பட மாட்டாது என்பதையும் அக்கட்டணங்கள் வேறு எந்தவொரு பரீட்சைக்காகவோ மாற்றீடு செய்ய இடம் தர மாட்டாது என்பதையும் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு** 4 - விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் இறுதி திகதியை வரை தாமதம் செய்வதால் ஏற்படும் பாதகமான நிலைகளை விண்ணப்பதாரர்களினால் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**10.0 விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்குமுறை** :-

அனைத்து விண்ணப்பதாரர்களும் <u>www.psc.sp.gov.lk</u> என்ற தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணையதளத்திற்குள் உற்பிரவேசித்து பரீட்சையை சரியாக தேர்ந்து, ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்தை தென் மாகாண அரசாங்க

